**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**ஊத்துக்குளி**
**அசல் வழக்கு எண் 47/2022**
**PW: 1**

2023–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 23 ஆம் நாள், வாதி தரப்பு (வா.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.பா.தரணீதர், பி.ஏ., எல்.எல்.எம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஊத்துக்குளி, அவர்களால் ஆனையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | பழனிச்சாமி | Caste | |
| Father Name | பொங்கியண்ணன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 53 |

தேதி 23.08.2023

**<u>முதல் விசாரனை</u>**

நான் திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், குன்னத்தூர் நவகாடு கிராமம், ஆலங்காடு, கதவு எண் 2/157B ல் வசித்து வருகிறேன். நான் இவ்வழக்கின் வாதியாவேன். இன்று இந்நீதிமன்றத்தில் எனது சாட்சியத்தை சத்தியபிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமான நிரூபண பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான். அதனை படித்து பார்த்து தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**<u>ஆவணங்கள்</u>**

1. 07.02.2006 ம் தேதிய கிரய ஆவண எண்.399/2006 ன் இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 16.09.2022 ம் தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நவகாடு கிராமம் புல எண் 26/2 க்குண்டான நில உரிமை விபரங்கள் இணைவழி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 16.09.2022 ம் தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நவகாடு கிராமம் புல எண் 26/2 க்குண்டான அ பதிவேடு விபரங்கள் இணைவழி நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 12.09.2022ம் தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நவகாடு கிராமம் புல எண் 26/1 மற்றும் 50/2 க்குண்டான நில உரிமை விபரங்கள் இணைவழி நகல்கள் (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.4 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.
5. 12.09.2022ம் தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நவகாடு கிராமம் புல எண் 26/1 மற்றும் 50/2 க்குண்டான அ பதிவேடு விபரங்கள் இணைவழி நகல்கள் (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.5 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.
6. 12.09.2022ம் தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நவகாடு கிராமம் புல எண் 26 மற்றும் 50 க்குண்டான நில அளவை வரைபடம் இணைவழி நகல்கள் (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.6 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.
7. குன்னத்தூர் காவல் நிலைய மனு எண் 112/2022 வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. 15.03.2006ல் தேதிய வாதியின் பெயரில் உள்ள கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதியின் தரப்பில் மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2023.08.23 07:31:55 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.